பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 11 2025** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

2. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. மக்கள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா குற்றம் சாட்டியுள்ளார்.

4. சத்தீஸ்கட்டில் 37 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கிப்போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா தற்போது பெல்ஜியத்தை எதிர்த்து ஆடிவருகிறது.

-- இனி விரிவான செய்திகள்

<<<<<<<>>>>>

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் **மன்கிபாத்** நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — Modi — (1) - 63 Sec.)***

நம் நாட்டின் பன்முகத்தன்மையை ஒருங்கிணைக்கும் உத்வேகம் இந்த நிகழ்ச்சியின் மூலம் தமக்கு கிடைப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

***(Sound Byte — Modi — (2) - 47 Sec.)***

<<<<<<<>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அவையின் விதிகளுக்கு உட்பட்டு எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க அனுமதிக்கப்படும் என்றார்.

இந்த கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற அனைத்துக்கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சார்பில் இந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் 36 கட்சிகளை சேர்ந்த 50 பேர் பங்கேற்றனர்.

நாளை தொடங்கும் இந்த கூட்டத்தொடர் வரும் 19-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

15 அமர்வுகளை கொண்ட இந்த கூட்டத்தொடரில் முக்கிய மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

<<<<<<<>>>>>

மக்கள் நலனில் அக்கறையின்றி காங்கிரஸ் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிகாரத்தை கைப்பற்றுவதில்தான் காங்கிரஸ் கவனம் செலுத்துவதாக தெரிவித்தார்.

கர்நாடகாவில், காங்கிரஸ் கட்சி தலைவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல் இதனையே வெளிப்படுத்துவதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை எதிர்க்கட்சிகள் தேவையின்றி அரசியலாக்குவதாக மத்திய இணையமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வது தேர்தல் ஆணையத்தின் கடமையாகும் என்று கூறினார்.

இப்பணிகளுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பது ஏன் என்றும் திரு ராம்தாஸ் அத்வாலே கேள்வி எழுப்பினார்.

<<<<<<<>>>>>>

அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வழிகாட்டியாக பகவத்கீதை திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஹரியானாவின் குருஷேத்ராவில் சர்வதேச கீதா திருவிழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

நேர்மையான வாழ்வியலை பின்பற்றுவதற்கான உலகளாவிய கையேடாக பகவத்கீதை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பகவத்கீதை உபதேசங்களை அனைவரும் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையம் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>

சத்தீஸ்கட்டில் 37 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

தண்டேவாடா மாவட்டத்தில் காவல்துறையினர்முன் இவர்கள் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவர்களில் 12 பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

சரணடைந்தவர்களில் 27 பேருக்கு, 65 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>

தில்லி மாநகராட்சியின் 12 வார்டுகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று அமைதியாக நடைபெற்று முடிந்தது.

முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா Shalimar Bagh-ல் உள்ள வாக்குச்சாவடியில் தமது வாக்கினை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>>

இந்தியா — இங்கிலாந்து இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி இன்று நிறைவடைந்தது.

ராஜஸ்தானில் கடந்த இரண்டு வாரங்களாக இந்த பயிற்சி நடைபெற்று வந்தது.

இருநாடுகளுக்கு இடையேயான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

கலிபோர்னியா மாகாணத்துக்கு உட்பட்ட **Stockton** நகரத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த குடும்ப விழாவில் புகுந்த ஒரு நபர் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

அவரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் காவல்துறையினர் கூறினர்.

<<<<<<<>>>>>

**Ditwah** புயலினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாக இந்தியா கூறியுள்ளது.

இந்த புயல் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்தியா விமானப்படை மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிவாரணப் பொருட்களும் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த புயல் காரணமாக **212** பேர் உயிரிழந்துள்ளதாக இலங்கை அரசு கூறியுள்ளது.

**218** பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும், **2** லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கிப்போட்டி இறுதியாட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா — பெல்ஜியத்தை எதிர்த்து ஆடிவருகிறது.

----------------

உத்தராகண்டில் நடைபெற்ற **President** கோப்பைக்கான படகு போட்டியில் இந்தியா **18** தங்கம், **25** வெள்ளி, **21** வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-----------------

முஸ்டாக் அலி கோப்பைக்கான டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் உத்தராகண்ட் அணியை வென்றது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த உத்தராகண்ட் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு **164** ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த தமிழக அணி **17** புள்ளி ஒரு ஓவரில், **5** விக்கெட் இழப்பிற்கு **168** ரன் எடுத்து வெற்றிபெற்றது.

------------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **350** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை **18** புள்ளி இரண்டு ஓவரில் **4** விக்கெட் இழப்பிற்கு **111** ரன் எடுத்துள்ளது.

ராஞ்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **349** ரன் எடுத்தது.

விராட் கோலி அதிரடியாக ஆடி **120** பந்துகளில் **135** ரன் குவித்தார்.

ரோஹித் சர்மா **57** ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

இப்போட்டியில், **3** சிக்சர்களை அடித்ததன் மூலம், ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சிக்சர்களை அடித்த வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

<<<<<<<<**END**>>>>>>